# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 12.05.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7529/F/2024**

திரு.சுரேஷ்குமார், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
எண்.5 கணபதி நகர் 2வது தெரு,
தஞ்சாவூர் மாவட்டம்-613 007.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.சுரேஷ்குமார், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஜா.பெனிஜா, கட்டிடக்கலை மற்றும் திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 11.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “ Please provide information on the appropriate action taken against Dolpin School under Sub-section(5) of section 56 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971,(Tamil Nadu act 35 of 1972) for lock & Seal” **என்பன** போன்ற தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், உதவி இயக்குநர், தஞ்சாவூர் மாவட்டம்-613 007 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் மனுதாரர் 14.04.2024 தேதியிட்டு பிரிவு **19(1)-ன்** கீழ் முதல்

மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 27.05.2024 தேதியிட்டு பிரிவு 19(3) இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்துமேல்முறையீட்டு அலுவலரால் ந.க.983/2024,தமா-2, நாள் 23.09.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் இனம் 1 மற்றும் 2-க்கு இணைப்புகள் ஏதும் இன்றி முழுமையற்ற தகவல்களாகவும் உரிய முறையில் சான்றொப்பமிடாமலும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு இனம் 1 மற்றும் 2-க்கு முழுமையான தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 11.03.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்களில் இனம் 1 மற்றும் 2-க்கு முழுமையான / சரியான தகவல்களை மனுதாரருக்கு <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய முறையில் சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப் பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு, அது குறித்த அறிக்கையினையும் Tracking Consignment-யும் இணைத்து 17.06.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **மனுதாரரின் 11.03.2024 தேதியிட்ட தகவல் கோரும் மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்கள் வழங்காகதற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.அரங்கராசு, திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று**

நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

- மனுதாரரின் 14.04.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காகததற்காக அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 7529/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
எண்.5 கணபதி நகர் 2வது தெரு,
தஞ்சாவூர் மாவட்டம்-613 007.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.அரங்கராசு,**
**திட்ட உதவியாளர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ (14.04.2024தேதிய)**
**உதவி இயக்குநர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**தஞ்சாவூர் மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.சுரேஷ்குமார்,
எண்.47, எலிசாநகர்,
சரபோஜி கல்லூரி அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்-613 005.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-